உரிமத்துடன்கூடிய வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப் பணியிடங்களை நிரப்ப, மாநில அளவில் "தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்" ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஏறத்தாழ 75,000 எக்டேர் பரப்புள்ள காப்புக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளை தமிழ்நாடு வனத் துறையிடமிருந்து பெற்று, தைலத் தோட்டங்களையும், முந்திரித் தோட்டங்களையும் பராமரித்து வருகிறது. இக்கழகத்தின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில், இந்த ஆண்டு 4,500 எக்டேர் பரப்பில் 9 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் மரக்கூழ் தோட்டங்கள் நடவு செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், 800 எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் ஒட்டு முந்திரிக் கன்றுகள் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் நடவு செய்யப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்குத் தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர இடங்களில் அரசு வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, அதில் தேயிலைத் தோட்டங்களை அமைத்து, கடந்த 36 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம் 40 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி செய்தல், குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஈ) அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்களாக ஆக்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உலகம் ஒரு குடும்பம்" என்னும் உன்னதத் தத்துவத்தை அடைய உறுதுணையாக விளங்கும்

போக்குவரத்துகளில், பயணிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லுதல்; அத்தியாவசியப் பொருட்களை அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல்; தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை எடுத்துச் செல்லுதல்; விவசாயப் பொருட்களை விற்பனைக்கு ஏற்றிச் செல்லுதல் போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சாலைப் போக்குவரத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்களின் சேவை மகத்தானது.

இத்தகைய ஓட்டுநர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களாக இருப்பதால், அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களை வழங்கும்பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம், 1974-ன்கீழ் பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாகக் கொண்டு செல்லும் வாடகை வாகன உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதிக்காக ஒரு சதவீத கூடுதல் வரி பல ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம்மூலம் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நல வாரியம் "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்" என்ற பெயரில் தற்போது இயங்கிவருகிறது. எனவே, இந்த வாரியத்தில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஊர்தி ஓட்டுநர்கள் மட்டுமே உறுப்பினராக முடியும் என்ற எண்ணத்தை ஓட்டுநர்களிடம் தோற்றுவிக்கும் வகையில் உள்ளதால் லாரி மற்றும் வேன் மற்றும் இதர வாகன ஓட்டுநர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வழிவகை இருந்தாலும், அவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்வதில்லை. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 10 இலட்சம் அமைப்புசாரா ஊர்தி ஓட்டுநர்கள் உள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியத்தில் 1 இலட்சத்து 39 ஆயிரத்து 595 நபர்களே உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்பது எனது அரசின் விருப்பமாகும்.

முற்பகல் 11-25

எனவே, இந்த வாரியத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் அனைவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ள வழிவகை ஏற்படும்வகையிலும், இந்த வாரியத்தின் நலத் திட்ட உதவிகள் அனைத்து ஓட்டுநர்களுக்கும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலும், "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்" என்ற இந்த வாரியத்தின் பெயரை "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்", அதாவது Tamil Nadu Unorganized Drivers Welfare Board" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(உ) சீனாவின் மானசரோவர் மற்றும் நேபாளத்தின் முக்திநாத் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இந்துக்களுக்குப் பயணச் செலவில் மானியம் வழங்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: இந்தக் கூட்டத் தொடரில் விதி 110-ன்கீழ் நான் அளிக்கும் கடைசி அறிக்கை இது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தக் கூட்டத் தொடருக்குக் கடைசி என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயிரம் இன்னல்கள் வந்தாலும் இறைவனைக் காணும் பணி மேற்கொள்வோம்" என அனைத்து மதத்தினரும் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.

கிறிஸ்தவ பெருமக்கள் ஜெருசலேம் புனித யாத்திரை மேற்கொள்ளவும், இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் புனித யாத்திரை